மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 192, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை.

வினா எண். 193, திரு. ஆர். தங்கராஜ் இருக்கையில் இல்லை.

வினா எண். 194, டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

194—

பரமக்குடி தொகுதியில் கால்நடைத் தீவன புல் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம்.

*9118—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் கீழ் கால்நடைத் தீவனப் புல் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் ?

திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் நிரந்தர வறட்சி மாவட்டமாக அமைந்துள்ளது. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் கால்நடைகளைப் பராமரிக்கும் தொலைநோக்கு எண்ணத்தில் செயல்படும் திட்டத்தின் ஒரு பகுதியாக கால்நடை தீவனப் புல் பண்ணை ஆரம்பிக்க பரமக்குடி அருகில் உள்ள உரப்புளி பஞ்சாயத்தில், பரமக்குடி ஒன்றியத்தில் ஆரம்பிக்க இடங்கள் எல்லாம் தேர்வு செய்யப்பட்டன. அதிகக் கால்நடைகள் உள்ள பரமக்குடி பகுதியில் இந்த கால்நடை தீவனப் புல் பண்ணையை ஆரம்பிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்

வினாக்கள்—விடைகள்

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் வழி மறிச்சான் கிராமத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி களில் 10 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 3.20 இலட்சம் செலவில் புல் பண்ணை ஆரம்பிக்க 14—8—90ல் வேளாண்மைத் துறை யின் அரசு ஆணையில் ஒப்பளிக்கப்பட்டது. இந்த இடம் புல் பண்ணை அமைக்கத் தகுதியற்றது என்று மண் ஆய்வின்போது அறியப்பட்டது. எனவே, மாவட்ட ஆட்சியரின் கருத்திற்கு இசைந்து காரான் என்ற கிராமத்தில் இப்பண்ணை 1990-91 ஆம் நிதி ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வரு கிறது.

முற்பகல் 10-45

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, வழிமறிச்சான், பரமக்குடிக்கு அருகாமையிலுள் ளது. காரான் என்ற, மண்டபம் ஒன்றியத்திலுள்ள அந்தப் பகுதி களில் கால்நடைகள் அதிகமாக இல்லை. ஆகவே, அந்தக் காரான் என்ற இடத்திலிருந்து புல்களை இராமநாதபுரம் நகராட்சிக்கோ அல்லது கீழக்கரைக்கோ கொண்டு வரு வதற்கு கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. அந்தக் கால்நடைகள் பெரும்பாலும் பால் உற்பத்தியை பெருக்குவதற்காகத்தான் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இத்திட்டத்தின் மூலம் வகுக்கப்படும் இந்தப் புல் பண்ணை, கால்நடைகள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் அமைத்தால். மக்களுக்கும் , கால்நடைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் ஆகவே, பெட்ரோல் விலை, டீசல் விலைகள் எல்லாம் கூடி யிருக்கிற இந்த நேரத்தில், அவைகளையெல்லாம் கருத்திற் கொண்டு, தொலை நோக்கு எண்ணத்துடன், கால்நடை அதிக மாக உள்ள பரமக்குடி பகுதிகளில் அமைக்க மாண்புமிகு அமைச் சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பரமக்குடி ஒன்றியத் தில் அமைக்க முன்வருவாரா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி ஒன்றியத்தில் அந்தப் பகுதி யைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழ்கின்ற கால்நடைகளைக் கணக்கில் கொண்டு, பரமக்குடி பகுதியில் புல் பண்ணை வைப் பதற்கு தேவையான நீர்வளம், மண்வளம் இருக்குமாயின் வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் கீழ் இருக்கின்ற நிதி யினுடைய தன்மையைக் கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 195, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச் சர்,